செ. வெ. எண். 60 நாள் 27.01.2020

பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று ( 27.01.2020 ) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்விக் கடன் மற்றும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 310 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பொது மக்கள் நேரில் அளித்தனர். இம்மனுக்களை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இம்மனுக்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பொது மக்களின் கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை விவரத்தை உடனடியாக மனுதாரருக்கு தெரிவிக்குமாறு தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 2019 -2020 ஆம் ஆண்டுக்கான கிராமப்புற பெண் கல்வி ஊக்கத் தொகை திட்டத்தின்கீழ் 1017 பள்ளிகளைச் சேர்ந்த 8 ஆயிரத்து 221 மாணவ / மாணவியர்களுக்கு ரூ. 51 இலட்சத்து 63 ஆயிரத்துக்கான வங்கி வரைவோலைகளை தொடர்புடைய மாவட்ட / வட்டார கல்வி அலுவலர்களிடமும், தஞ்சாவூர் வட்டத்தைச் சார்ந்த 11 பயனாளிகளுக்கு ஸ்மார்ட் குடும்ப அட்டைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.